# இலங்கைத் தமிழ்ப்பண்பாட்டில் வில்லிசை - ஓர் சமூக இசையியல் பார்வை

**திருமதி சுகன்யா அரவிந்தன்**
B.A., BFA., MFA.,Dip in Ed
விரிவுரையாளர்,
இசைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

**திறவுச்சொற்கள்**

வில்லுப்பாட்டு, தமிழ்ப்பண்பாடு, சமூக விழுமியம், பண்பாடுசார் கலைவடிவம், பண்பாட்டுக் கையளிப்பு, சமூக அடையாளம்.

**ஆய்வின் அறிமுகம்**

எந்தவொருவிடயம் பற்றியும் முழுமையாக அறிந்துகொள்ளவேண்டும் என்றால் அதனது வரலாற்றுநோக்கிலான பார்வை அவசியம் மிக்கதாக அமைகின்றது. சிலவிடயங்கள் காலப்போக்கிலே இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோவதுண்டு. இதனை நிவர்த்தி செய்யவேண்டுமெனில் அவ்வப்போதானபதிவுகள் மேற்கொள்ளப்படுதல் மிகஅவசியமாகின்றது.

அந்தவகையிலே இலங்கைத்தமிழ்ப்பண்பாட்டினைப் பொறுத்தவரையிலே காலத்தால் காவுகொள்ளப்பட்டதும், போரினால் அழிபட்டுப்போனவைகளும், அவ்வப்போது வாழ்ந்த பெரியோர்களது அக்கறையீனங்களும் பலதகவல்களை இன்று நாம் பெற்றுக்கொள்வதிலே பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கின்றது. உண்மை வரலாற்றினைத் தெரிந்து கொள்வதிலே பலசிரமங்களை எதிர்கொள்ளவேண்டிய நிலைக்கு இலங்கைத் தமிழ்ச் சமூகம் தள்ளப்பட்டிருக்கின்றது. ஆனால் இது மேலும் தொடருமாயின் ஒரு காலத்திலே யாவும் மற்றவர்களின் கைகளுக்கு உரித்தாகி விடக்கூடிய நிலைமைகளும், தமிழ்ப்பண்பாட்டுக்கான அடையாளங்கள், தனித்துவங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைக்கப்பட்டு விடும் நிலைமைகளும் ஏற்படலாம்.

எனவே இவை பற்றிய பதிவுகள் தகுந்த ஆதாரங்களோடு ஆவணப்படுத்தப்படல் அவசியம். இது இலங்கைத் தமிழ்ப்பண்பாட்டினை அழியாமல் காத்துக்கொள்ளக்கூடியதாக அமைந்திருப்பதோடு இனிவரும் சந்ததியினருக்கும் இது சார்வரலாறுகள் பற்றிய தெளிவினை ஏற்படுத்த சிறந்த ஒரு களத்தினை அமைத்துக்கொடுக்க அவ்வாய்வு துணைநிற்கும்.

**ஆய்வின் நோக்கம்**

போராலும், அதன் வடுக்களாலும் இலங்கைத் தமிழ்ச்சமூகம் இழந்தவை பல. அவற்றுள் பண்பாட்டு வேர்களாகத் திகழும் கலைகளும் அடங்கும். இந்த நிலையிலே மண்மணக்கும் பண்பாட்டுக்கலை வடிவங்கள் பல தங்கள் தனித்துவங்களை இழந்தும், காலத்தின் போக்கிற்கேற்ப பொருளாதாரம் ஈட்டப்பயன்படுகின்ற கருவிகளாகவும் மாற்றம் பெற்றிருக்கின்ற இவ்வேளையிலே தடம்மாறி நிற்கின்ற கலைகளை இனங்கண்டு இவற்றின் சுயத்தினை மீள் பதிவுசெய்வதன் வாயிலாக இக்கலைகளை புத்துயிர்பெறச்செய்யமுடியும் என்கின்ற நோக்கிலே இவ்வாய்வானது முன்வைக்கப்படுகின்றது. குறிப்பாக ஆய்வின் மட்டுப்பாடுகள் கருதி தமிழ்ப்பண்பாட்டுக்கலைவடிவங்களுள் சமூகக்கலைவடிவமாகத்திகழும் வில்லுப்பாட்டுக்கலை மரபு மாத்திரமே ஆய்வின் பொருளாகக் கொள்ளப்படுகின்றது.

**ஆய்வுப் பின்னணி**

இலங்கைத்தமிழ் சமூகத்தின் பண்பாடு ஒருகாலத்திலே கிராமியக்கலைகளின் நிழலிலே செழித்திருந்தது வரலாறு. ஆனால் பின்னர் இலங்கையிலே ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை மாற்றங்கள் தமிழ்ச்சமூகத்தின் தனித்துவ இழப்பிற்கும், சுயத்தின் மாற்றத்துக்குமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியிருந்தது என்பதும் வரலாறு நமக்குணர்த்தும் உண்மை. இந்த நிலையிலே சமகால பண்பாட்டுக்கலப்படங்கள் தமிழின் தனித்துவத்தையும் அடையாளத்தினையும் உருமறைப்புச்செய்து விடுமோ என்கின்ற அச்சம் சம காலச் சூழலிலே ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலையிலிருந்து தமிழ்ச்சமூகத்தினை அதன் தனித்துவங்களோடு பாதுகாத்து சந்ததிக்கையளிப்புச்செய்யவேண்டியது எமது கடமை. அந்த வகையிலே தமிழ்ப்பண்பாட்டின் கலைகளாகத் திகழுகின்ற கதாகாலேட்சபம், புராண படனம், வில்லுப்பாட்டு, கரகம், காவடி என்பவற்றைக் குறித்து நிற்கலாம்.

இந்தக் கலைமரபுகள் மிகுந்தசெல்வாக்குப் பெற்ற ஒன்றாக இலங்கைத்தமிழர் வரலாற்றிலே ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் காலப்போக்கிலே பண்பாட்டு ஓட்டத்திலும் கலாசாரமாற்றங்களுக்கும் ஈடுகொடுக்கமுடியாதநிலையில் இக்கலைதள்ளுண்டுபோனது. இக்கலைகள் பற்றிய எந்தத் தடையங்களும் தமிழ்க் கலைமரபிலே நிறைவாகப் பேணப்படவில்லை என்று தான் சொல்லலாம். கலாசாரத்தினை அழியாமல் காத்துவிடவேண்டும் என்கின்ற நல்லெண்ணத்திலே ஒரு சிலர் மாத்திரம் இக்கலைவடிவங்களைக் கைக்கொண்டுவந்தாலும் மக்கள் மத்தியிலே அது சென்றடைதல் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

ஒருசமூகத்தின் கலாசாரத்தினைக் காத்து அச்சமூகப் பண்பாட்டின் வரலாறானது உண்மையும் காத்திரமும் மிக்கதாக அமையவேண்டுமானால் அதுகடந்து வந்த பாதைகள் பற்றிய பதிவுகள் ஒழுங்காகவும், முறையாகவும், பேணப்படுதலும் அடுத்த சந்ததிக்குப் பண்பாட்டுக் கையளிப்புச் செய்வதும் மிகவும் அவசியம்.

ஒரு காலத்திலே தமிழ்ப்பண்பாட்டினைக் கட்டிக்காத்த கலைமரபு இன்று நலிவடைவதும், அது பற்றிய விழிப்புணர்வோ, பதிவுகளோ முன்னெடுக்கப்படாத நிலையிலே அக்கலைவடிவங்கள் பற்றிய விழிப்புணர்வையும் மக்கள் மத்தியிலே ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் இக்கலைவடிவங்கள் பற்றியபதிவுகளையும் ஆவணப்படுத்தும் செயற்பாட்டுக்குரிய முன்னெடுப்பாக இந்தஆய்வு அமைகின்றது.

**ஆய்வின் குறிக்கோள்**

1. வில்லிசை மரபு பல கலைவடிவங்களின் கூட்டுக்கலை வடிவமாகக் காணப்படுகின்றது.
2. இது காத்திரமான ஒரு சமூகக்கலைவடிவமாகப் பின்பற்றப்பட்டுவருகின்றது.
3. பண்பாடு பேசும் கலைவடிவமாக வில்லிசைமரபு.
4. யாழ்ப்பாண பண்பாட்டுவரலாற்றில் இசையியல் வரலாறாகக் வில்லிசை.

**ஆய்வுவடிவமும் முறையியலும்**

இது ஒரு வரலாற்று,விவரண ஆய்வாக அமையும். இதன் முதலாம் நிலைத்தரவுகளாக நேர்காணல்களும் இரண்டாம் நிலைத்தரவுகளாக இக்கலைபற்றி முன்னர் வந்த பத்திரிகைப்பதிவுகளும் ஒரு சில கட்டுரைகளும் பயன்படுத்தப்படுகின்றன. நேர்காணல்களே இந்த ஆய்வுக்குரிய முக்கிய தகவல் ஊடகமாக அமைந்திருக்கின்றது.

**முன்னாய்வுகள்**

இலங்கைத் தமிழ் ஆய்வுப்புலங்களைப் பொறுத்தவரையிலே இது பற்றிய ஆய்வுகள் எதுவும் இதுவரை பெரியளவிலே முன்னெடுக்கப்படவில்லை என்று கூறலாம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே பல ஆய்வுக்கட்டுரைகள் வில்லுப்பாட்டுக் கலைமரபு சார்ந்து வெளியிடப்பட்டிருப்பினும்

சென்னைப்பல்கலைக்கழகத்திலே முனைவர் பட்டப்படிப்புக்காக மேற்கொள்ளப்பட்ட வில்லுப்பாட்டு பற்றிய ஆய்வு மிகவிரிவானது. முனைவர் கலைமகன், தமிழ் மரபிலே வில்லுப்பாட்டினை ஒரு கலைவடிவமாகப் பார்ப்பது முதல், அதன் கலைவரலாறு, இக்கலைவழங்கப்படும் முறை, என்பன பற்றி மிகவிரிவாக ஆராய்ந்துள்ளார்.

இலங்கைத்தமிழ்ப்புலத்தைப் பொறுத்தவரையிலே ஆலயங்களிலே ஆற்றப்படுகின்ற ஒரு கலைவடிவமாக வழக்கிலிருந்து சமகாலத்திலே பொருளாதாரப்பண்டமாக மாற்றம்பெற்று காட்சிப்பொருளாக மாத்திரம்இக்கலைவடிவம் இன்று மாற்றம் பெற்றிருக்கின்றது.

எனவே தமிழ்ப்பண்பாட்டின் வேர்களாகத்திகழ்ந்திருந்த இந்தக்கலைவடிவத்தின் கலை மற்றும் சமூகக்கூறுகளை இனங்காட்டி நிற்பதாக இவ்வாய்வு தொடரப்படும்.

**ஆய்வின் முடிவும் பயனும்**

வில்லுப்பாட்டு பற்றிய ஒருமீள் பார்வையினை மக்கள் மத்தியிலே ஏற்படுத்திக் கொள்ள இது ஒரு சிறந்த களமாகத் தொழிற்படும். இது மட்டுமல்ல இலங்கைத்தமிழிசை மரபிலே இந்தகலைவடிவம் பெறுகின்ற இடத்தினையும், இது கொண்டிருக்கக்கூடிய ஏனைய இசைசார் கூறுகள் பற்றியும் விளங்கிக் கொள்ளமுடியும்.

மேலும் கணிணியுகமாக மாற்றம் பெற்றுக்கொண்டிருக்கக் கூடிய சமகால சமூக ஓட்டத்திலே இவ்வாறான சமூகபண்பாட்டு மூலக்கூறுகளை மீளவும் பதிவுசெய்து கொள்வதன் வாயிலாகப் பண்பாட்டு, சமூக, நெறிமுறை, விழுமியங்கள் போன்றவை அழிந்து போகாமல், கால ஓட்டத்திலே தொலைந்து போகாமல் இருக்க வழி செய்வதற்குரிய களத்தினை இவ்வாய்வு அமைத்துக்கொடுக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

**உசாத்துணை நூல்கள்**

1. இராஜம் புஷ்பவனம் : வில் பிறந்த கதை : குமரன் பதிப்பகம் : ஜனவரி 1991
2. ஸ்ரீதரன் இராசையா : வில்லிசைக்கலை : 2005.
3. நாட்டுப்புறக்கலைகள் : வலைத்தமிழ்கலைக்களஞ்சியம்.
4. இராஜம் புஷ்பவனம் : வில்லுப்பாட்டு என்னும் கதைகூற்றங்கு : குமரன் பதிப்பகம் : 1995
5. க. மகேஸ்வரன் : எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் தமிழர் வாழ்வுத் தொன்மை : தமிழர் கலைகள் : 2010
6. வில்லிசைக்கலைஞர்களது கலந்துரையாடல்கள்